ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: **dcommunications@cbsl.lk, communications@cbsl.lk**
வெப்தளம்: **www.cbsl.gov.lk**

# பத்திரிகை வெளியீடு

**வெளியிடுபவர்** புள்ளிவிபரத் திணைக்களம்
**திகதி** 2015 செத்தெம்பர் 30

**2015 செத்தெம்பரில் பணவீக்கம்**

2015 செத்தெம்பரில் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்படும் மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான பணவீக்கம் (2006/07=100) முன்னைய மாதத்தில் பதிவு செய்யப்பட்ட -0.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் -0.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் 2015 ஓகத்தின் 1.0 சதவீதத்திலிருந்து செத்தெம்பரில் 0.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.



கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 2015 ஒகத்திலிருந்து செத்தெம்பரில் 0.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதாந்த வீழ்ச்சிக்கு உணவு வகையிலுள்ள விடயங்களின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். சிலவகைக் காய்கறிகள், பச்சை மிளகாய், உடன்மீன், முட்டை, அரிசி, சின்ன வெங்காயம், தேங்காய் எண்ணெய் என்பனவற்றின் விலைகள் 2015 செத்தெம்பரில் வீழ்ச்சியடைந்தன. எனினும், கோழி இறைச்சி, மாட்டிறைச்சி, கருவாடு, மாசிக் கருவாடு, சில வகையான பழவர்க்கங்கள், பெரிய வெங்காயம், எலுமிச்சம் பழம் மற்றும் சீனி என்பனவற்றின் விலைகள் இம்மாத காலப்பகுதியில் அதிகரித்தன. உணவல்லா வகையில் ஆடை மற்றும் காலணி; தளபாடம், வீட்டுச் சாதனங்கள் மற்றும் வழமையான வீட்டு உபயோகப் பேணல் பொருட்கள்; மற்றும் பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம் ஆகிய துணை வகைகள் அதிகரித்தன. ஏனைய அனைத்து துணை வகைகளான வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய பொருள்கள்; நலம்; போக்குவரத்து; தொடர்பூட்டல்; கல்வி; மற்றும் பல்வகைப் பொருட்கள் மற்றும் பணிகளின் விலைகள் இம்மாத காலப்பகுதியில் மாற்றமின்றியிருந்தன.